திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த ஒருமுனை விற்பனை வரி இல்லாததனால், வரி விதிப்பு அதிகாரிகள் தங்கள் சொந்த அபிப்பிராயப்படி நிர்ணயம் செய்கிறார்கள். அதனால் அதிக வரி விதிக்கப்பட்டு, தொந்தரவுகளுக்கு ஆளாகிறார்கள் என்று அரசாங்கத்திற்கு ஏதாவது கம்பிளைன்ட் வந்திருக்கிறதா ? பல பண்டங்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதித்தால் அரசாங்கத்திற்கு இன்னும் அதிகமான வருமானம் கிடைக்கும் என்று தெரிகிறது. அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதிக வரி விதிக்கப்படுகிறது என்று சொல்வது சரியல்ல. நியாயமான முறையில்தான் உரிய வரி விதிக்கப்படுகிறது. ஒருமுனை விற்பனை வரியினால் என்னென்ன பலன் கிடைக்கும் என்று பரிசீலனை செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்தக் குழுவிலே எத்தனைபேர் இருக்கிறார்கள் ? அவர்களில் அஃபிஷியல்ஸ் எத்தனை பேர் ; நான் அஃபிஷியல்ஸ் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அது 'ஒன் மேன் கமிஷன்'. அதற்குத் தலைவர் திரு. எஸ். பி. சீனிவாசன், ஐ.ஏ.எஸ். ; செயலாளர் திரு. நாசிம்மன். ஐ. ஏ. எஸ்.

Renovation of Mosques

* 63 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that steps have been taken by the Government to renovate important and ancient Mosques in the State ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(இ) அதன் விபரங்கள் பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

1973 ஆகஸ்ட் 7]

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, 500 ஆண்டு களுக்கு முற்பட்ட பாழடைந்த பள்ளிவாசல்கள் எத்தனை இருக்கின்றன என்ற புள்ளிவிபரங்கள் ஏதாவது இருக்கின்றனவா ? பண்டைக்காலம் முதலே சிறப்புப் பெற்ற, ஆனால் பழுதடைந்திருக்கும் பள்ளிவாசல்களைப் புதுப்பிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா அல்லது புதிதாகக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பள்ளிவாசல்களை புதிதாகக் கட்டுவதற்கான திட்டம் இல்லை. மராமத்து செய்வதற்காகத் தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 'ரென்னவேஷன் ஆஃப் மாஸ்க்' என்றுதான் கோரப் பட்டிருக்கிறது. அதுபற்றி வக் போர்டிடம் அபிப்பிராயம் கேட்கப் பட்டிருக்கிறது.

The Secretary has submitted a report stating that the renovation work of the Wakf Institutions would be entrusted to a committee to be appointed by the Wakf Board which will be called the Wakf Board Renovation Committee. Each Committee shall consist of seven members one of whom shall be the Tamil Nadu Wakf Board Member of the district in which the institution concerned is situated and in case the member pleads his inability to serve on the committee, a nominee of the Wakf Board shall be included. The Superintendent of the Wakf Board of the zone shall be another member and he shall be the Secretary of the committee. The remaining five members will be the office-bearers of the concerned Wakf Board as well as members of the public of the locality. The accounts shall be operated jointly by both the President and the Secretary. இந்த விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் அதுபற்றி முடிவு செய்யப்படவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வக்ஃப் போர்டின் பொருளாதார நிலைமை சரியாக இல்லாததனால் அவர்கள் உதவி செய்ய முடியாது என்று கூறப்படுகிறது. அதனால் அரசாங்கமே அதிகப் பணத்தை இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்குச் செலவு செய்து, நூற்றுக்கணக்கான பள்ளிவாசல்களைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபோன்ற மானியம் வேண்டுமென்று கேட்பது இதுதான் முதல் தடவை. அந்தக் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு லட்சம் ரூபாய் அளித்திருக்கிறார்கள். மேலும் கோரிக்கை வருவதாக இருந்தால் பரிசீலனை செய்யப்படலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த மராமத்து வேலைகளுக்கு வக்ப் போர்டிலிருந்து எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் ? மதுரை, கோரிபாளையம் போன்ற இடங்களில் பழைய பள்ளிவாசல்கள் இருக்கின்றனவே. அவைகளையும் புதுப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் ஜப்பார் அவர்கள் சொல்லும்போது வக்ப் போர்டில் நிதி நிலைமை சரியாக இல்லை என்று சொன்னார்கள். ஆகவே, அவர்களால் நிதி உதவி செய்ய முடியாது என்று தெரிகிறது. அரசாங்கத்திடம் உதவி கேட்கப்பட்டது. அற நிலையத் துறையில் கொடுக்கப்படுவது போல ஒரு லட்சம் ரூபாய் மானியம் கொடுக்கப்பட்டது. மேலும் இம்மாதிரியான காரியங்கள் எல்லாம் அரசாங்க உதவியைக் கொண்டு மட்டும் செய்ய முடியாது. பொதுமக்கள் நன்கொடைகள் மூலமாகச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தியாகராய நகரில் ஒரு மசூதியை ஆரம்பிக்க விண்ணப்பம் செய்து கொண்டதும், உடனே அந்த இடத்தில் ஒரு திடீர் பிள்ளையார் தோன்றியதையும் அரசு அறியும். திரும்ப அந்த இடத்தில் மசூதி கட்ட ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மூலக் கேள்வியோடு தொடர்புடைய ஒன்று அல்ல. எனவே பதில் சொல்ல முடியவில்லை.

Declaration of assets of members of Local Bodies

*64 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to regulate the declaration of assets of members of Local Bodies; and

(*b*) if so, the details thereof?